தேதி.27.01.2025

**<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>**

**O.S.No**.46/2014 **திரு.நடராஜன்** **வா.சா.**1

**<u>வா.சா.1: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எனது அப்பா சத்தியமங்கலம் வடக்கு பேட்டையில் கிழக்கு வீதியில் உள்ள சொத்தை எந்த ஆண்டு கிரையம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. எனது அப்பா உயிருடன் இருக்கும்போது அங்கு வீடு கட்டி பிரதிவாதியுடன் குடியிருந்து வந்தார் என்றால் நானும் குடியிருந்து வந்தேன். எனக்கு சத்தியமங்கலம் வடக்கு பேட்டையில் தனியாக வீடு உள்ளது என்றால் எனக்கு தனியாக வீடு இல்லை. நான் பொய் சொல்கிறேன் என்றும் எனது அப்பா உயிருடன் இருக்கும்போது வீடு கட்டிக்கொடுத்தார் என்றும் அதில் தான் குடியிருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா வாய்மொழியாக சத்தியமங்கலம் வடக்கு பேட்டையில் கிழக்கு வீதியில் உள்ள வீட்டை கொடையாக கொடுத்துவிட்டதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது பொய் என்றும், நான் அந்த வீட்டில் குடியிருக்க வில்லை என்றும், பிரதிவாதி தான் அந்த

வீட்டில் குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. அந்த வீட்டை எனது அப்பா 1ம் பிரதிவாதிக்கு 26.06.1989ல் உயில் எழுதி வைத்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா இறந்தவுடன் 1ம் பிரதிவாதி தான் அந்த வீட்டில் குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. அந்த வீட்டை 1ம் பிரதிவாதிக்கு எனது அப்பா உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 2013ல் தெரியும். அந்த உயில் சாசனம் செல்லாது என்று ஏதேனும் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எனது அப்பா வாய்மொழியாக கொடையாக அந்த வீட்டை எனக்கு கொடுத்ததாக நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. அந்த உயிலை நான் பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. அந்த உயிலில் 1ம் பிரதிவாதியை மணி என்று குறிப்பிட்டு எழுதியிருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. அந்த வீட்டிற்கு மணி என்ற தன் பெயரில் தான் பிரதிவாதி வீட்டுவரி கட்டி வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. எனது பெயரில் வீட்டு வரி கட்டுகிறேனா என்றால் இல்லை. காளிமுத்து கவுண்டர் பெயரில் கட்டுகிறேன். தாவா சொத்தைப்பொருத்து

எதாவது குடும்ப ஏற்பாடு செய்துகொண்டோமா என்றால் இல்லை. தாவா சொத்து, சத்தியமங்கலம் வடக்கு பேட்டை வீடு இரண்டையும் எனது அப்பா 1ம் பிரதிவாதிக்கு உயில் எழுதிவைத்து 1ம்பிரதிவாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் அதெல்லாம் பொய். அந்த இரண்டு உயிலிலும் மணி என்ற கூப்பிடும் பெயரில் எழுதி வைத்துள்ளார் என்றும், அது பிரதிவாதியை கூப்பிடும் பெயர் தான் என்று சொன்னால் சரியல்ல. அந்த 2 உயிலிலையும் எனது அப்பா நல்ல மனநிலையில் தான் எழுதி வைத்தார் என்றும், அவரை யாரும் கட்டாயப்படுத்தவில்லை என்று சொன்னால் பொய் மோசடியானது. அந்த இரண்டு உயிலும் உண்மை என்று தெரிந்தும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தாவா சொத்தில் பாகம் கேட்க எனக்கு உரிமையில்லை என்றும் தாவாவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.